## மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# இலவச மருத்துவ முகாம்!

## 8–ந் தேதி நடக்கிறது!!

சென்னை, மார்ச். 03– சர்வதேசமகளிர்தினத்தை முன்னிட்டு 08.03.2020 அன்று மெட்ரோ ரெயில் நிலையங்களில் இலவச பொது மருத்துவ முகாம் நடைபெறுகிறது.

சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம்உடல்நலம் மற்றும் உயிரியல் தொழில்துறைஅமைப்புடன் இணைந்து சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மெட்ரோரெயில்பயணிகள், பொதுமக்கள்மற்றும்மகளிர் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் வருகின்ற 8–ந் தேதி அன்று காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் வடபழனி, செனாய் நகர் மெட்ரோ, விமான நிலைய மெட்ரோ, ஆலந்தூர், அசோக் நகர் மற்றும்சென்ட்ரல்மெட்ரோ ஆகிய 6 மெட்ரோ ரெயில் நிலையங்களில் நடைபெறுகிறது.

இந்த இலவச பொது சுகாதார முகாமில் பி.எம்.ஐ. (உயரம் மற்றும் எடை) ரத்த அழுத்தம்,

சீரற்ற ரத்த சர்க்கரை, ஆலோசனைகள் போன்றவைவழங்கப்படும். மெட்ரோரெயில்பயணிகள், பொதுமக்கள்மற்றும்மகளிர் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று செய்திக் குறிப்பு ஒன்றில் கூறப்படுள்ளது.